***கவனிக்க.-*** *17.02.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2008 - 2017 පෙබරවාරි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.02.23**

*2008 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 345 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**கவனிக்க.-** வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாய சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, மாச்சு மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மாச்சு மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவைகள் ஆணைக்குழு

### இலங்கை உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2017

இலங்கை உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களைக் கோருவதற்கு நீதிச்சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. அதற்கமைவாக பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும்.

2. மாதாந்தம் ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 எனும் சம்பள அளவுத்திட்டம் இப்பதவிக்குரியதாகும். (ஆரம்ப சம்பள படிநிலை இச்சம்பள அளவுத்திட்டத்தின் (SL 1-2016) 16 ஆவது சம்பள படிநிலை (ரூ. 69,115) ஆகும். 2020.01.01 ஆந் திகதிவரை அ. நி. சு. 03/ 2016 அட்டவணை II இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.)

3. **தகைமைகள் :**

(அ) இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் எனின் அப்பதவியில் நிரந்தர மாக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(ஆ) (i) 7 வருடங்களுக்குக் குறையாத காலப்குதிக்குச் செயற்பாட்டு ரீதியாக தொழிலில் ஈடுபட்டு வருகின்ற வழக்கறிஞர் எனின் ; மற்றும்

(ii) விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு 30 வயதிற்குக் குறையாதவராகவும் 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- யாதேனுமொரு அமைச்சில், அரச திணைக்கள மொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் வழக்கறிஞராக பதவிநிலை பதவியில் அல்லது சட்ட ரீதியான நிலையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில், சட்டக் கல்லூரியில் சட்டம் தொடர்பான ஆசிரியராக, அல்லது இலங்கை நீதிச்சேவையின் அதிகாரியாக அல்லது தொழில் நியாய சபையின், கிராமப்புற நீதிமன்றத்தின் தலைவராகப் பணியாற்றிய காலப்பகுதி "செயற்பாட்டு ரீதியாக தொழிலில் ஈடுபட்ட காலம்" எனக் கருதப்படும்.

4. **சகல விண்ணப்பதாரிகளும்**-

(அ) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும் ;
(ஆ) சிறந்த நன்நடத்தை உடையவர்களாக இருக்க வேண்டும்.

5. பின்வரும் ஆவணங்கள் விண்ணப்பதாரிகளிடம் வேண்டப்படுமிடத்து அவற்றைச் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) உயர் கல்வித் தகைமையினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(இ) தொழில்சார் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் ;
(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெற்றுள்ள உயர் தேர்ச்சியினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

6. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கொழும்பு 12, உயர் நீதிமன்றத்தில் பணியாற்ற வேண்டும்.

7. இப்பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்து அதனை 2017.03.31 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், நீதிச்சேவைகள் ஆணைக்குழு, கொழும்பு 12" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் **"இலங்கை உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2017"** எனக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

8. அரச சேவையில், அரச கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களைத் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

பிரதீப் ஜயதிலக்க,
மேல் நீதிமன்ற நீதிபதி/ செயலாளர் (பதில்),
நீதிச்சேவைகள் ஆணைக்குழு.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2017, பெப்புருவரி 9.

மாதிரி விண்ணப்பப்படிவம்

### இலங்கை உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2017

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) திரு./ திருமதி/ செல்வி :----.
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கிலத்தில்) :----.

3. (i) பிறந்த திகதி :----.
(ii) 31.03.2017 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் : ----.

4. (i) நிரந்தர வதிவிட முகவரி :----.
(ii) மாவட்டம் :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. தொலைபேசி இலக்கம் :
(i) வீடு :----.
(ii) கைத்தொலைபேசி :----.

7. இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளராக விண்ணப்பம் செய்வீர்கள் எனின்,
(i) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
(ii) அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
(iii) சேவைக்காலத்தில் ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்குட்பட்டுள்ளீர்களா ? :----.
(iv) ஆம் எனின், அதுபற்றிய விபரங்கள் :----.

8. வழக்கறிஞராக விண்ணப்பம் செய்வீர்கள் எனின்,
(i) வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.
(ii) தற்போது செயற்பாட்டு ரீதியாக தொழிலில் ஈடுபட்டு வருகின்ற நீதிமன்றங்கள் :----.
(iii) ஏதேனுமொரு அமைச்சில், அரச திணைக்களமொன்றில், கூட்டுத்தாபன மொன்றில், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில், சட்டக் கல்லூரி ஒன்றில் அல்லது இலங்கை நீதிமன்றச் சேவையில் ஈடுபட்டிருப்பின்,

(i) நியமனத் திகதி :----.
(ii) பதவி மற்றும் தரம் :----.
(iii) திணைக்களம் மற்றும் தற்போது பணியாற்றும் சேவை நிலையம் : ----.
(iv) பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ----.
(v) சேவைக்காலத்தில் ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டுள்ளீர்களா ? : ----.
(vi) ஆம் எனின், அதுபற்றிய விபரங்கள் : ----.

9. (i) நீதிமன்றத்தினால் ஏதேனுமொரு குற்றத்திற்கு நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? : ----.
(ii) ஆம் எனின், அதுபற்றிய விபரங்களைக் குறிப்பிடுங்கள் :----.

என்னால் மேலே வழங்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**
(தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பொருந்தாது.)

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................................ என்பவர் எனக்குப் பிரத்தியேகமான முறையில் நன்கு அறிமுகமானவர் எனவும், எனது முன்னிலையில் ......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

(விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி ஒருவர் அல்லது ரூ. 47,615 அல்லது அதற்கு அதிகமான மாதாந்தக் கூட்டிணைந்த சம்பளத்தினைப் பெறும் அரசின் நிரந்தரப் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் உறுதிப்படுத்த வேண்டும்.)

**திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல்**

..................................................... பணியாற்றும் திரு./ திருமதி/ செல்வி .......................................... என்பவர் இலங்கை உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருக்கின்றார் என்றும், இவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் எனவும், விண்ணப்பப் படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 40 வயதிற்கு மேற்படாதவர் எனவும், எனக்கு முன்பாக தனது கையொப்பத்தை இட்டார் எனவும் தெரிவித்து இவ்விண்ணப்பப்படிவத்தை சான்றுப்படுத்தி இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :----.

2-969/ 1

## நீதிச்சேவைகள் ஆணைக்குழு

### இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2017

இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களைக் கோருவதற்கு நீதிச்சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. அதற்கமைவாக பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும்.

2. மாதாந்தம் ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 எனும் சம்பள அளவுத்திட்டம் இப்பதவிக்குரியதாகும். (ஆரம்ப சம்பள படிநிலை இச்சம்பள அளவுத்திட்டத்தின் (SL 1-2016) 12 ஆவது சம்பள படிநிலை (ரூ. 62,595) ஆகும். 2020.01.01 ஆந் திகதிவரை அ. நி. சு. 03/ 2016 அட்டவணை II இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.)

3. **தகைமைகள்** :

(அ) தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான 4 வருட சேவைக்காலத்தைக் கொண்ட இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் I ஆம் தரத்திற்குரிய பதிவாளர் எனின் ; அல்லது

(ஆ) (i) 5 வருடங்களுக்குக் குறையாத காலப்குதிக்குச் செயற்பாட்டு ரீதியாக தொழிலில் ஈடுபட்டுள்ள வழக்கறிஞர் எனின் ; மற்றும்

(ii) விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு 28 வயதிற்குக் குறையாதவராகவும் 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- யாதேனுமொரு அமைச்சில், அரச திணைக்களமொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் வழக்கறிஞராக பதவிநிலை பதவியில் அல்லது சட்ட ரீதியான நிலையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில், சட்டக் கல்லூரியில் சட்டம் தொடர்பான ஆசிரியராக, அல்லது இலங்கை நீதிச்சேவையின் அதிகாரியாக அல்லது தொழில் நியாய சபையின், கிராமப்புற நீதிமன்றத்தின் தலைவராகப் பணியாற்றிய காலப்பகுதி "செயற்பாட்டு ரீதியாக தொழிலில் ஈடுபட்ட காலம்" எனக் கருதப்படும்.

4. **சகல விண்ணப்பதாரிகளும்**-

(அ) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும் ;

(ஆ) சிறந்த நன்நடத்தை உடையவர்களாக இருக்க வேண்டும்.

5. பின்வரும் ஆவணங்களைக் கோருமிடத்து அவற்றைச் சமர்ப்பிக்கக் கூடியவர்களாக விண்ணப்பதாரிகள் இருக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) உயர் கல்வித் தகைமையினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(இ) தொழில்சார் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெற்றுள்ள உயர் தேர்ச்சியினை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

6. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கொழும்பு 12, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பணியாற்ற வேண்டும்.

7. இப்பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து அதனை 2017.03.31 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், நீதிச்சேவைகள் ஆணைக்குழு, கொழும்பு 12" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் **"இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2017"** எனக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

8. அரச சேவையில், அரச கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களைத் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

பிரதீப் ஜயதிலக்க,
மேல் நீதிமன்ற நீதிபதி/ செயலாளர் (பதில்),
நீதிச்சேவைகள் ஆணைக்குழு.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2017, பெப்புருவரி 9.

மாதிரி விண்ணப்பப்படிவம்

### இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2017

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) திரு./ திருமதி/ செல்வி :----.

(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கிலத் தில்) :----.

3. (i) பிறந்த திகதி :----.
(ii) 31.03.2017 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் : ----.

4. (i) நிரந்தர வதிவிட முகவரி :----.
(ii) மாவட்டம் :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. தொலைபேசி இலக்கம் :
(i) வீடு :----.
(ii) கைத்தொலைபேசி :----.

7. பதிவாளராக விண்ணப்பம் செய்வீர்கள் எனின்,
(i) பதிவாளர் தரம் I இற்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
(ii) அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
(iii) 31.03.2017 ஆந் திகதிக்குப் பதிவாளர் தரம் I இல் சேவையாற்றிய காலம் :----.
(iv) சேவைக்காலத்தில் ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்குட்பட்டுள்ளீர்களா ? :----.
(v) ஆம் எனின், அதுபற்றிய விபரங்கள் :----.

8. வழக்கறிஞராக விண்ணப்பம் செய்வீர்கள் எனின்,
(i) வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.
(ii) தற்போது செயற்பாட்டு ரீதியாக தொழிலில் ஈடுபட்டு வருகின்ற நீதிமன்றங்கள் :----.
(iii) ஏதேனுமொரு அமைச்சில், அரச திணைக் களமொன்றில், கூட்டுத்தாபனமொன்றில், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில், சட்டக் கல்லூரி ஒன்றில் அல்லது இலங்கை நீதிமன்றச் சேவையில் ஈடுபட்டிருப்பின்,
(i) நியமனத் திகதி :----.
(ii) பதவி மற்றும் தரம் :----.
(iii) திணைக்களம் மற்றும் தற்போது பணியாற்றும் சேவை நிலையம் :----.
(iv) பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ----.
(v) சேவைக்காலத்தில் ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டுள்ளீர்களா ? : ----.
(vi) ஆம் எனின், அதுபற்றிய விபரங்கள் : ----.

9. (i) நீதிமன்றத்தினால் ஏதேனுமொரு குற்றத்திற்கு நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? : ----.
(ii) ஆம் எனின், அதுபற்றிய விபரங்களைக் குறிப்பிடுங்கள் :----.

என்னால் மேலே வழங்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**
(தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பொருந்தாது.)

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................................. என்பவர் எனக்குப் பிரத்தியேகமான முறையில் நன்கு அறிமுகமானவர் எனவும், எனது முன்னிலையில் ......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

(விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி ஒருவர் அல்லது ரூ. 47,615 அல்லது அதற்கு அதிகமான மாதாந்தக் கூட்டிணைந்த சம்பளத்தினைப் பெறும் அரசின் நிரந்தரப் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் உறுதிப்படுத்த வேண்டும்.)

**திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல்**

......................................................... பணியாற்றும் திரு./ திருமதி/ செல்வி .................................................. என்பவர் இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருக்கின்றார் என்றும், இவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் எனவும், விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 40 வயதிற்கு மேற்படாதவர் எனவும், எனக்கு முன்பாக தனது கையொப்பத்தை இட்டார் எனவும் தெரிவித்து இவ்விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தி இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :----.

2-969/ 2

## நீதிச்சேவைகள் ஆணைக்குழு

### இலங்கை பதிவாளர் சேவையின் தரம் III இற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த ஆட்சேர்ப்பு - 2017

இலங்கை பதிவாளர் சேவையின் III ஆம் தரத்திற்குரிய பதிவாளர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக அட்டவணைப்படுத்தப்பட்ட யாப்புக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி கீழுள்ள தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக ஆட்சேர்த்துக் கொள்வதற்கு நீதிச்சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

2. **தகைமைகள்** :

(i) வழக்கறிஞர்கள் ; அல்லது
(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரிகள் ; அல்லது
(iii) அதற்குச் சமமான தொழில்சார் அல்லது கல்வித் தகைமைகளைக் கொண்ட நபர்கள் ;
(iv) 20 வயதிற்குக் குறையாத 30 வயதிற்கு மேற்படாத வர்களாக இருத்தல் வேண்டும்.

அலுவலக முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நடபடிமுறைகள் தொடர்பான அனுபவமுடைய வர்களுக்குக் கூடிய முக்கியத்துவம் வழங்கப்படும்.

2. மாதமொன்றுக்கு ரூ. 41,580 - 11 X 755 - 18 X 1,030 - ரூபா 68,425 எனும் சம்பள அளவுத்திட்டம் இப்பதவிக்குரியதாகும். (ஆரம்ப சம்பளப் படிநிலை இச்சம்பள அளவுத்திட்டத்தின் (MN 7-2016) 3 ஆவது சம்பளப் படிநிலை (ரூ.43,090) ஆகும். 2020.01.01 ஆந் திகதிவரை அ. நி. சு. 03/2016 அட்டவணை II இற்கு அமைவாகச் சம்பளம் செலுத்தப்படும்.) இச்சம்பள அளவுத்திட்டத்தின் 7 ஆவது சம்பளப் படிநிலையினை அடையும் முன்னர் வினைத்திறன் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்திபெற வேண்டும்.

3. நேர்முகப் பரீட்சையின் பின்னர் சேவையில் இணைத்துக் கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு சேவைத் தேவைப்பாட்டிற்கு அமைவாக தீவின் எப்பாகத்திலும் உள்ள வெற்றிடங்கள் நிலவக்கூடிய நீதிமன்றங்களுக்கு நியமனம் வழங்கப்படலாம். சேவைத் தேவைப்பாட்டிற்கு அமைவாகவன்றி வேறு எந்தக் காரணங்களுக்காகவும் உரிய காலம் நிறைவடைவதற்கு முன்னர் இடமாற்றம் வழங்குமாறு விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

4. இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவித்தலுக்கு அமைவாக விண்ணப்பப்படிவங்களை 11 1/2" X 8 1/2" அளவுடைய கடதாசியில் தயாரித்து அனுப்ப வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக மாத்திரமே விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்க வேண்டும்.

5. தற்போது சேவையில் உள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்ப தாரிகள் 2017.03.31 ஆந் திகதிக்கு முன்னர் **"செயலாளர், நீதிச்சேவைகள் ஆணைக்குழு, கொழும்பு 12"** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் **"நீதிமன்ற பதிவாளர் தரம் III இற்கான திறந்த ஆட்சேர்ப்பு - 2017"** எனக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

7. உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்ப தாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித முன்னறி வித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

8. விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாகவும் ஆட்சேர்த்துக் கொள்ளும் படிமுறையின்போதும் எழும் சிக்கல்கள் தொடர்பாகவும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

9. குறித்த வெற்றிட எண்ணிக்கையினை நிரப்புதல்/ நிரப்பாமல் இருத்தல் என்பது தொடர்பான தீர்மானம் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

பிரதீப் ஜயதிலக்க,
மேல் நீதிமன்ற நீதிபதி/ பதிற் கடமையாற்றும் செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆணைக்குழு.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2017, பெப்புருவரி 9.

மாதிரி விண்ணப்பப்படிவம்

### இலங்கை பதிவாளர் சேவையின் தரம் III இற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த ஆட்சேர்ப்பு - 2017

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) திரு./ திருமதி/ செல்வி :----.
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கிலத்தில்) :----.

3. (i) பிறந்த திகதி :----.
(ii) 31.03.2017 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் : ----.

4. (i) நிரந்தர முகவரி :----.
(ii) மாவட்டம் :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

6. தொலைபேசி இலக்கம் :
(i) வீடு :----.
(ii) கைத்தொலைபேசி :----.

7. வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் செய்த திகதி : ----.

8. விண்ணப்பதாரி பட்டதாரி எனின்-
(i) பட்டம் :----.
(ii) பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்த திகதி :----.
(iii) பல்கலைக்கழகம் :----.

9. அதற்குச் சமமான கல்வி அல்லது தொழில்சார் தகைமைகள் :
(i) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(ii) தகைமைகள் :----.
(iii) தகைமைகளைப் பூர்த்திசெய்த திகதி :----.

10. தற்போது தொழில் புரிவீர்கள் எனின்,
(i) பதவி மற்றும் தரம் :----.
(ii) தற்போது வகிக்கும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.
(iii) திணைக்களம் மற்றும் தற்போது பணியாற்றும் சேவை நிலையம் :----.

11. (i) ஏதேனும் தவறொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.
(ii) ஆம் எனின், அதுபற்றிய விபரங்களைக் குறிப்பிடுங்கள் :----.

என்னால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

(தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பொருந்தாது.)

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................................. என்பவர் எனக்குப் பிரத்தியேகமான முறையில் நன்கு அறிமுகமானவர் எனவும், எனது முன்னிலையில் ......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

(விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி ஒருவர் அல்லது ரூ. 47,615 அல்லது அதற்கு அதிகமான மாதாந்தக் கூட்டிணைந்த சம்பளத்தினைப் பெறும் அரசின் நிரந்தரப் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் உறுதிப்படுத்த வேண்டும்.)

**திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல்**

............................................................ பணியாற்றும் திரு./ திருமதி/ செல்வி ................................................ என்பவர் இலங்கை நீதிமன்ற பதிவாளர் சேவையின் தரம் III இற்குரிய பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான கல்வித் தகைமைகளைக் கொண்டிருக்கின்றார் என்றும், இவர் அப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் எனவும், விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 30 வயதிற்கு மேற்படாதவர் எனவும் தெரிவித்து இவ்விண்ணப்பப்படிவத்தை சான்றுப்படுத்தி இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :----.

2-969/ 3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.